2010 மே 6] [திரு. தா.மோ. அன்பரசன்]

இதுபோன்ற துயரச் சம்பவங்கள் வருங்காலங்களில் நடைபெறாமல் தடுக்க அனைத்துத் தொழிற்சாலைகளிலும் கழிவு நீர்த் தொட்டிகளில் இறங்கிப் பணி செய்யும்போது, துப்புரவுத் தொழிலாளர்கள் பாதுகாப்பாகப் பணிபுரிய மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து தொழிற்சாலை நிர்வாகங்களுக்குத் தொழிற்சாலை ஆய்வகத் துறை அறிவுரை வழங்கியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளோடு நானும் ஒத்துப் போகிறேன் என்பதை எடுத்துக்காட்டி, இதுகுறித்துப் பேசிய அனைவருமே, இறந்துவிட்ட 5 தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலையின் சார்பாக 3 இலட்சம் ரூபாய் தருவதாகக் குறிப்பிட்டு, 85 ஆயிரம் ரூபாய் வரையிலே இதுவரை தந்திருக்கிறார்கள். 5 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பங்களுக்குக் கிடைக்கின்ற வகையில், எஞ்சியுள்ள தொகையை அரசின் சார்பிலே வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக அக்குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை கிடைக்க வழி வகுக்கப்படும் என்பதையும், அந்தத் தொழிற்சாலை அதிபர்கள்மீதும், இந்தத் தவறுக்குக் காரணமானவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அந்தக் கோரிக்கையையும் அரசு ஏற்றுக்கொண்டு, இந்தத் துறையின் சார்பாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம் என்பதையும் திட்டவட்டமாக நான் இங்கே குறிப்பிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பள்ளிகளில் மொழிச் சிறுபான்மையினர் தமிழை மட்டுமே கற்க வேண்டுமென தமிழக அரசு வற்புறுத்துவதாகப் பிரச்சாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் கற்பிக்கப்படாத பள்ளிகளில், மாணவர்களை தமிழ் கற்க அரசு வற்புறுத்துகிறதென்றும், தமிழைத் தவிர பிற தாய்மொழிகளைக் கற்க அரசு

[பேரவைத் தலைவர்] [2010 மே 6

அனுமதிப்பதில்லையென்றும் தவறாகப் பொது மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்படுவது குறித்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கி. ஆறுமுகம் மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் 'தகவல் கோரல்' என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்பது சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்கிற சமூக நீதியினுடைய தத்துவத்தின் அடிப்படையில், சமச்சீர்க் கல்வி என்கிற ஓர் அற்புதமான முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டில் ஏற்றுக்கொண்டு அரசு எடுத்துக்கொண்டுள்ள முயற்சியும் உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்பொழுது அதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், சமச்சீர்க் கல்வி அறிமுகப்படுத்தப்படுவதால், தமிழகத்தில் இருக்கிற உருது, தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட, மொழிவழிச் சிறுபான்மையின மக்கள் மத்தியில், அவர்களது தாய் மொழியைப் படிக்க அந்த மாணவர்களுக்குத் தமிழ்நாட்டில் அனுமதி மறுக்கப்பட்டிருப்பது போலவும், அந்த மாணவர்கள்மீது தமிழை நாம் கட்டாயப்படுத்தி, திணிப்பது போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டு, அது எந்த அளவுக்கு வெற்றியடைந்திருக்கிறது என்று சொன்னால், இம்மாதம் 2 ஆம் தேதி கர்நாடகத்தின் முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்கள் தன்னுடைய வீட்டிலே பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றபோது சொன்னது கீழ்க்கண்டவாறு செய்தியாக வெளிவந்திருக்கிறது:

"Chief Minister B.S. Yeddyurappa on Saturday expressed displeasure with the Tamil Nadu Government's order to close down Kannada medium schools. Addressing reporters at his residence, he said his Government had reserved Rs.50 crore for the development of Kannada medium schools in

2010 மே 6] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

Tamil Nadu. 'I will take suitable action after receiving a report on it. I will not allow Kannada medium students to suffer at any cost. My Government is ready to protect Kannada medium schools, teachers and students. I came to know about the Tamil Nadu G.O. through the media. I will discuss the issue with the Tamil Nadu Government officials.'

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற கன்னடவழிப் பள்ளிகளை முழுவதுமாக நாம் மூடப் போவதைப் போன்று பேசியிருக்கிறார்.

பதினைந்து நாட்களுக்கு முன்பு, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரையும், என்னையும் சந்தித்த மொழிவழிச் சிறுபான்மையின மக்களுடைய கூட்டமைப்பைச் சார்ந்தவர்களும், அதாவது, மலையாளம் பேசுகின்றவர்கள், உருது பேசுகின்றவர்கள், தெலுங்கு பேசுகின்றவர்கள், கன்னடம் பேசுகின்றவர்கள், தங்கள் மொழியில் கல்வி கற்பதற்கு இயலாத சூழ்நிலை தமிழகத்தில் உருவாக்கப்பட இருப்பது போலவும், தமிழ் மொழியைத் தங்கள்மீது அரசு வனைந்து, புனைந்து திணிப்பது போலவுமாக ஒரு தோற்றத்தை சிலர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாம் எல்லோரும் அறிவோம். இந்த அவையில்கூட நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அதைப்போன்ற எந்த முயற்சியுமில்லை, கன்னடவழிப் பள்ளிகளையோ அல்லது பிற மொழிவழிப் பள்ளிகளை மூடுவதற்கான உத்தேசம் எதுவுமில்லையென்று சொன்னபோதும்கூட மீண்டும் மீண்டும் அந்த முயற்சிகளை மேற்கொள்வது யார்? அதைப்போன்ற கருத்துரு ஏதும் இருக்கிறதா? கர்நாடக முதலமைச்சர் அவர்கள் நமது அரசைத் தொடர்புகொண்டு இதைப் பற்றிய தெளிவுகளைக் கேட்டிருக்கிறாரா? 50 கோடி ரூபாய் வைத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே, அந்தப் பணத்தைப் பற்றிய தகவல் எதுவும் நமக்கு இருக்கிறதா? அந்தப் பணத்தை நமது அரசினுடைய அனுமதியில்லாமல் அவர் இங்கே செலவு செய்ய முடியுமா என்பதைப் போன்ற கருத்துகளை நான் தங்கள் வழியாக நமது, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.*

[2010 மே 6

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மொழிவழிச் சிறுபான்மை சமூகத்தினர் தங்கள் தாய் மொழியில், தமிழ்நாட்டில் தங்குதடையின்றிப் படித்து வருகின்றார்கள். அதை எந்தவிதத்திலும் நம்முடைய அரசோ, தமிழர்களோ தடுப்பதுமில்லை, எதிர்ப்பதுமில்லை. ஆனால் இன்றைக்கு ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களே ஒரு கூற்றை வெளியிட்டு, அதனுடைய தாக்கம் இன்றைக்கு டெல்லியில் எதிரொலித்திருப்பதாக நான் கருதுகிறேன்.

குறிப்பாக, ஒகேனக்கல் திட்டத்தைக் குறித்துகூட இன்றைக்கு கர்நாடகாவிலிருந்து சென்றவர்கள் பிரதமரைச் சந்தித்து ஒரு மனுவைத் தந்திருக்கிறார்கள். அதுகூட இதனுடைய தாக்கத்தின் எதிரொலியாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். கன்னட மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டில் இருக்கின்ற திரைப்படங்களை அங்கே வெளியிட்டால் கூட, மூன்று மாதங்கள் கழித்துதான் வெளியிட வேண்டுமென்றும், அப்படி திரைப்படங்கள் வெளியிடப்படுகிறபோது, அடித்து நொறுக்குவதும் வாடிக்கையாக இருக்கிறது. அத்தகைய தகாத சம்பவங்களிலே தொடர்ந்து அங்கு ஈடுபட்டு வருகின்றார்கள். இங்கிருந்து பேருந்துகள், சரக்குந்துகள், மகிழுந்துகள் சென்றால், இது போன்ற எல்லைப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகள் வருகின்ற போது உணர்ச்சிவசப்பட்டு, அங்கிருக்கக்கூடிய மக்கள், சில அமைப்பினர் இதிலே வன்முறையைத் தூண்டுகிறார்கள்.

முற்பகல் 11-15

ஆக, இரண்டு மாநிலங்களுக்குமிடையே குடிநீர்ப் பிரச்சினையால் இப்படி ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்ற நிலையில், இன்றைக்கு இந்த மொழிவழிச் சிறுபான்மை மக்களுக்கான கல்விக்கூடங்களைத் தமிழக அரசு மூடுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளதாகவும், தமிழக அரசு கன்னட மொழியை இனி தமிழகத்தில் படிக்க முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தி இருப்பதாகவும் இப்போது திட்டமிட்டு ஒரு பொய்யான பிரச்சாரத்தை அங்கு மேற்கொண்டிருக்கிற காரணத்தால், எதிர்காலத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் இரண்டு மாநிலங்களுக்கான உறவுகளிலும் மிகப் பெரிய ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிற சூழல் இருக்கிற

2010 மே 6] [திரு. தி. வேல்முருகன்]

காரணத்தால் நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து இந்த அவைக்கு ஒரு விளக்கமான செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அதேநேரத்தில் நம்முடைய தமிழர்கள், கர்நாடகம், கேரளம், ஆந்திரம் மற்றும் இந்தியாவில் பல மாநிலங்களில் சென்று தங்கிப் பயின்று வருகின்றார்கள், வேலை செய்து வருகிறார்கள். வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் என்பதற்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்கள் அனைத்தும் இங்குள்ள மற்ற மாநிலத்தவர்களுக்குச் சென்றடைகிறது. ஆனால், இவ்வளவு உரிமைகளைக் கேட்கின்ற அவர்கள், நம்முடைய தமிழர்களுக்கு அங்கே அந்த வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவார்களா என்கிற உத்தரவாதத்தையும் பெற்று, இதற்கான ஒரு தீர்வை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், பிற மாநிலங்களில் தமிழ் மொழி இல்லாமல் அங்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. தமிழர்களுக்கான சேர்க்கை அங்கு இல்லை. தேசிய ஒருமைப்பாடு என்பது ஒரு வழிப் பாதையாக இருக்கக்கூடாது என்பதைக்கூட நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேற்றைய முன்தினம் டெல்லியிலே பெரியார் மய்யக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். ஆனால், இங்கிருக்கிற தமிழர்களுக்கு இருக்கிற பெருந்தன்மை, நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிற பெருந்தன்மை, நம்முடைய மாநிலத்து மக்களுக்கு இருக்கிற பெருந்தன்மையை பக்கத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்கிற அறிவுறுத்தலோடு இதற்கு அரசு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. ஞா. ஜாண் ஜோசப்: பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு ஒரு விளக்கத்தை நான் இந்த அவைக்குத் தர விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. தங்கம் தென்னரசு] [2010 மே 6

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 2-5-2010 நாளிதழில் மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசும்போது, தமிழகத்தில் இயங்கி வரக்கூடிய கன்னட மொழிவழிப் பள்ளிகளை மூடிவிட தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளதாக தான் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பதாகவும், இதுகுறித்து தமிழக அரசுடன் பேசவிருப்பதாகவும் செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் கன்னடத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்ட 53 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் சுமார் 3,946 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். 185 கன்னட இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

கடந்த 2009-2010 ஆம் கல்வியாண்டில் காலியேற்பட்டிருக்கக் கூடிய 23 கன்னட மொழி இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 14 கன்னட மொழிவழி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 4 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகப் பட்டியல் கோரப்பட்டிருக்கிறது.

கன்னட மொழிவழிப் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மை மொழிப் பள்ளிகளுக்கும் சிறுபான்மை மொழிகளில் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. செயல்வழிக் கற்றல் முறையில் மாணவர்கள் எளிதாகக் கற்க கன்னட மொழியில் கற்பித்தல் அட்டைகள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். எனவே, இந்தச் சூழ்நிலையில் நான் திட்டவட்டமாக இந்த அவைக்கும், அதன் மூலமாக நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க விரும்புவது, தமிழகத்திலுள்ள கன்னட மொழிப் பள்ளிகள் உள்பட எந்த சிறுபான்மைப் பள்ளிகளையும் மூடுவதற்குத் தமிழக அரசு எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை; இல்லவே இல்லை. மேலும் இந்தப் பள்ளிகள் திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது.

காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா மாண்புமிகு அண்ணன், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது, கர்நாடக

2010 மே 6] [திரு. தங்கம் தென்னரசு]

முதலமைச்சர் அவர்கள் 50 கோடி ரூபாயை அவருடைய அரசின் சார்பாக வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுகுறித்து நம்முடைய அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. கர்நாடக அரசின் சார்பாக நம்மிடத்திலே யாரும் பேசவும் இல்லை. நம்முடைய அனுமதி இல்லாமல் அத்தகைய பணிகளை இங்கே செயல்படுத்தவும் இயலாது என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். சிறுபான்மை மொழிகள் குறித்து மற்றொரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள், தமிழைக் கட்டாயமாக இன்றைக்கு அவர்கள்மீது திணிக்கிறோம் என்றவொரு ஐயப்பாட்டினை, ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழக அரசால் 2006 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 99, பள்ளிக் கல்வித் (யு2) துறை, நாள் 19-6-2006-ன்படி, 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ் மொழி கட்டாயப் பாடமாக (முதல் பாடமாக) அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, 2006-2007 ஆம் கல்வியாண்டில் முதல் வகுப்பில் தொடங்கி படிப்படியாக ஒவ்வோர் உயர் வகுப்பிலும் தமிழ் முதல் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் அவரது தாய் மொழியினைக் கற்றிட வழிசெய்யும் வகையில், இவ்வாணையின் பத்தி 3(2)-ல் பிரிவு (iv)-ல் தமிழ் மொழியைத் தவிர பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் தங்கள் தாய்மொழியை விருப்பப் பாடமாகக் கற்றுக்கொள்ளலாமென வழிவகை ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் 23-8-2007 அன்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை உள்ளடக்கிய அமர்வில்கூட ஒரு முக்கியமான தீர்ப்பை வெளியிட்டு, இந்தச் சட்டத்தை அவர்கள் அன்றைக்கு நிலைநிறுத்தினார்கள். அதிலே பத்தி எண் 38-ல் குறிப்பிட்டுள்ளதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

"In view of the above discussions, we hold that the impugned legislation is not colourable exercise of power intended with any mala fide intention

[திரு. தங்கம் தென்னரசு] [2010 மே 6

to take away the rights of the minorities to use their mother tongue as a medium of instruction and it does not in any way curtail the rights guaranteed on the minority institutions under Articles 29(1) & 30(1) of the Constitution of India. The impugned legislation is neither unreasonable, discriminatory nor it results in minority institutions losing their character" என்று மிகத் தெளிவாக அந்தத் தீர்ப்பிலேகூட மாண்புமிகு நீதிபதிகள் அன்றைக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தற்போது அமல்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சமச்சீர்க் கல்வி முறையில், நான்கு வாரியங்கள் பின்பற்றி வந்த பாடத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே பாடத் திட்டமாக (Syllabus) வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நான்கு வாரியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் ஒரே பாடத் திட்ட.த்தினைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால் பள்ளிகள் தற்போது தாங்கள் பின்பற்றி வரும் பயிற்று மொழிகளில் (Medium of Instruction) எவ்வித மாற்றமும் இருக்காது. எனவே, தமிழ் மொழி தவிர பிற சிறுபான்மை மொழிவழிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தொடர்ந்து தங்கள் மொழிகளிலேயே பாடங்களைக் கற்க வழிவகை இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிறுபான்மை மொழிப் பாட நூல்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பள்ளிகளுக்குத் தொடர்ந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மைப் பள்ளிகளில் பிற பாடங்கள் அம்மொழிவழியாகவே கற்பிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சமச்சீர்க் கல்வி முறையில் பிற மொழிவழி மாணவர்கள்மீது தமிழ் கட்டாயப்படுத்தப்படுகிறது என்பது தவறான செய்தியாகும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். சிறுபான்மை மக்கள்மீது தலைவர் கலைஞர் அரசு எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதை இந்த நாடும், இந்த அவையும் நன்றாக அறியும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமச்சீர்க் கல்வி சம்பந்தமாக

2010 மே 6] [கலைஞர் மு. கருணாநிதி]

கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் கூறிய கருத்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும்—தங்களுடைய கவலையை—அந்த அடிப்படையிலே எழுந்த கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

பத்திரிகைக்காரர்களைச் சந்திக்கின்றபோது, ஆராய்ந்து அல்லது ஏற்கெனவே இருந்ததைத் தெளிவுபடுத்திக் கொண்டு பேசுவது பெரிய கலை. இதிலே மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் எப்படியோ ஏமாந்திருக்கிறார் என்றுதான் நான் கருதுகின்றேன். கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையிலே உள்ள கலாச்சார உறவு, நட்புறவு—இவற்றை ஊனப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் அல்லது தெரிந்தோ, தெரியாமலோ சில நிருபர்கள் கர்நாடக முதல்வரிடத்திலே ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். அதனால்தான், “அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நம்பித் தடுமாற்றம் அடைய வேண்டாம்; எவர் சொன்ன சொல்லானாலும், அதை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்” என்ற பெரியாரின் மொழிகள்தான்—சர்வக்ஞர் என்கின்ற கர்நாடகத்திலே இருந்த அந்த மகானுடைய கொள்கையாகவும் போற்றப்படுகிறது.

நிருபர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கின்றபோது—என்ன காரணத்தாலோ—தமிழ்நாட்டிலுள்ள அதிகாரிகளையோ அல்லது அமைச்சர்களையோ அல்லது தொலைபேசி மூலமாக என்னிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டு அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பாரேயானால் நிச்சயமாக விளக்கம் பெற்றிருப்பார். ஆனால், அவசரத்தில் இந்த இரு மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வராதா; வந்தால் அதை வைத்துக் கொண்டு சில காலம் குளிர் காயலாமே என்று கருதுகின்ற சில பத்திரிகை நிருபர்களுடைய குறும்புத்தனத்தால், இந்த நிலை ஏற்பட்டதாக நான் கருதுகின்றேன். இதற்கான விளக்கத்தை நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லித் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதற்குப் பிறகும் மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் இதை உணராவிட்டால், நாம் வருத்தம்தான் படவேண்டும். ஆனால் நம்முடைய நிலை, தமிழ் மொழியைக் காப்பதிலும், பிற மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதிலும், தமிழ் மொழியைக் காக்கின்ற அந்த உணர்வில் பிற மொழிகளுக்கு எந்த ஊனமும் வராமல் பாதுகாப்பதும்தான்

என்ற தெளிவான கொள்கை உடையது திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த விளக்கத்தின் மூலமாக நான் கர்நாடக முதலமைச்சருக்கும், கர்நாடகத்திலே இருக்கின்ற மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11-25

(இ) மாண்புமிகு முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அளித்துள்ள கூடுதல் உணவு தானிய ஒதுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு சிறப்பு ஒதுக்கீடாக அரிசி ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்டு உடனடியாக அந்த அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டதாக கேள்வி நேரத்தின்போது நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு எவ்வளவு அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற தகவலையும் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து நேற்றைக்கு முன்தினம் நான் திரும்பிய செய்தி உங்களுக்கெல்லாம் தெரியும். நேற்றைக்கு முன்தினம் நான் டெல்லியிலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்தபோது, தமிழ்நாட்டின் அரிசித் தேவையை எடுத்துச் சொன்னேன். அவர்கள் அதைப் பற்றிக் கவனிப்பதாகக் காலையிலே சொன்னார்கள். நான் நேற்றைய முன்தினம் மாலையில் இங்கு வந்து சேர்ந்தேன். நான் வருவதற்கு முன்பாகவே, அரிசி அனுப்பப்பட்டது என்ற செய்தி இங்கே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி எவ்வளவு வந்தது என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். மொத்தமாக வந்தது 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் அரிசி; 65 ஆயிரம் டன் கோதுமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)